# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

**வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு**

# இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை மற்றும் புறப்படுதல் வெளிப்புற தாழ்வாரங்களில் உள்ள தூண்களில் விளம்பரம் செய்வதற்காக ஒரு நிறுவனத்தைத் தெரிவு செய்தல்

**விலைக்கோரல் இல.: SLTPB/PROC/2025/ S/180**

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (BIA) பயணிகள் முனையக் கட்டிடம் 1 இன் வருகை மற்றும் புறப்படுதல் வெளிப்புற தாழ்வாரங்களில் உள்ள தூண்களில் விளம்பரம் செய்வதற்கு உயர் தெளிவுத்திறன் கொண்ட LED திரைகளை கொள்வனவு செய்தல், வடிவமைத்தல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் (SLTPB) புகழ்பெற்ற மற்றும் தகுதியான விளம்பர நிறுவனங்கள்/ நிறுவனங்களிடமிருந்து **மூன்று (03) வருட காலத்திற்கு** முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகளை வரவேற்கிறது.

1. வளமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் தகுதிகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும் (தகுதி மூலப்பிரமாணங்கள்)
    - வெளிப்புற விளம்பரம், பிராண்ட் விளம்பரம் அல்லது தொடர்புடைய சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் நிரூபிக்கப்பட்ட அனுபவத்துடன் இலங்கையில் சட்டபூர்வமாக பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.
    - கடந்தகால அனுபவம்: டிஜிட்டல் விளம்பரத் திரைகளை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் இயக்குவதில் குறைந்தபட்சம் ஐந்து (5) ஆண்டுகள் நிரூபிக்கப்பட்ட அனுபவம்.
    - அங்கீகரிக்கப்பட்ட சட்டபூர்வ நிலையில் இருக்க வேண்டும். விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) லிமிடெட் (AASL) அல்லது இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப்பணியகம் (SLTPB) உடன் கடந்த கால அல்லது தொடர்ச்சியான சட்ட தகராறுகள்/சிக்கல்களைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டார்கள். விலைமனுதாரர்களிடமிருந்து பெறப்பட்ட உறுதிமொழிப் பத்திரம், தொழில்துறையில் நல்ல பெயரைக் கொண்ட அபகீர்த்தியாளர் பட்டியலில் இல்லாத நிறுவனத்தை உறுதிப்படுத்தும்.
    - கடந்த மூன்று (03) தொடர்ச்சியான ஆண்டுகளாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகளால் உறுதிப்படுத்தும் நிதி ஸ்திரத்தன்மையை நிரூபிக்க வேண்டும் (2021-2024)
    - இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், எந்தவொரு அல்லது அனைத்து முன்மொழிவுகளையும் காரணங்களைக் கூறாமல் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ உரிமையைக் கொண்டுள்ளது.
2. 2024ஆம் வருடத்தின் தேசிய பெறுகை வழிகாட்டியின் கீழ் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையை (NCB) பின்பற்றி விலைக்கோரல் மேற்கொள்ளப்படும்.
3. procurement@srilanka.travel என்ற மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை அனுப்பி, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் நிர்வாக பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்துபூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பித்து, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் சார்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000.00 ரூபா (இரண்டாயிரம் ரூபா மட்டும்) வைப்புத்தொகை/ நிகழ்நிலை பரிமாற்றம் செய்து, இலங்கை வங்கியின் கோர்ப்பரேட் கிளையில் பேணப்படும் **007119985** என்ற கணக்கு இலக்கத்திற்கு (2026.02.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்) பணம் செலுத்தி, பணம் செலுத்தியதற்கான ஆதாரத்தை procurement@srilanka.travel என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பின்வரும் தகவல்களை வழங்குவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
    - நிறுவனத்தின் பெயர்
    - தொடர்பு நபரின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்கள்
    - தொடர்பு கொள்ளும் நபரின் மின்னஞ்சல் முகவரி.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் https://www.srilanka.travel/tender-documents என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து விலைக்கோரல் ஆவணத்தை இலவசமாகப் பார்வையிடலாம்.
6. இது தொடர்பான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இலங்கையில் (23.10.2026ஆம் திகதி) meet.google.com/mvi- vtkv - gfb கூகுள் மீட் வழியாக இடம்பெறும்.
7. அனைத்து விலைமனுக்களுடனும் நிபந்தனையற்ற மற்றும் தேவைக்கேற்ப விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்பட வேண்டும். இது விலைக்கோரல் ஆவணத்தில் உள்ள படிவத்தின் பிரகாரம் முகாமைத்துவப் பணிப்பாளர், இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், இல. 35, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட A தர வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபா (ரூ. 1,000,000.00) பெறுமதியுடையதாகவும் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்ட நாளிலிருந்து 119 நாட்கள் வரை செல்லுபடியாகும் தன்மையிலும் இருக்க வேண்டும்.
8. விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் என முகவரியிடப்பட்ட விலைமனுக்களை பெறுகைப் பிரிவு, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், இல. 35, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு 2026.02.03 ஆம் திகதி பி.ப.2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்பட வேண்டும். இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தில் விலைக்கோரல் முடிவுறுத்தல் நேரத்தின் பின், நேரில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.
9. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் .
10. இந்த பெறுகைக்கான விலைமனுக்களை அழைப்பது அல்லது விலைமனுக்களை இரத்து செய்வது என்பன திணைக்கள பெறுகைக் குழுவின் விருப்பத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.
11. விலைமனுக்களை கடித உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை மற்றும் புறப்படுதல் வெளிப்புற தாழ்வாரங்களில் உள்ள தூண்களில் விளம்பரம் செய்வதற்காக ஒரு நிறுவனத்தைத் தெரிவு செய்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம்**
**இல. 35, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**